**கந்தகெட்டிய பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2017 ஜுன் 17 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையன் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கந்தகெட்டிய பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

சபையினால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டிற்கென உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 840,443 மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டதால் மீளாய்வாண்டிற்கான மிகை நிதிசார் கூற்றுக்களில் ரூபா 840,443 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாகப் பெறவேண்டியிருந்த வருவாய் ரூபா 464,339 ஆகும். இது ரூபா 1,659,008 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருவாய்க் கடன்பட்டோரும் திரண்ட நிதியமும் கூற்றுக்களில் ரூபா 1,194,669 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) ஏழு வேலைகளுக்கான கொடுப்பனவின் 10 சதவீதமான நிறுத்தி வைத்த வரி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் ரூபா 346,151 அதிகரித்தும் மீளச் செலுத்தவேண்டிய வைப்புகள் அதேயளவு குறைத்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 10,374,185 மற்றும் ரூபா 9,383,599 என்பனவாகும்.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,400,000 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை**

2008 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 422,734 ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையானது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாபநிதிய அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க அனுப்பி வைக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 888,941 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 101,358 ஆகும். இதற்கமைய, சாதகமற்ற வேறுபாடாக அவதானிக்கப்பட்ட தொகை ரூபா 787,583 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் விளைவுகளின் நிகர அதிகரிப்பின் பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காணப்படுகின்றது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 929,635 | 566,545 | 363,090 | |
| குத்தகை வாடகை | 1,849,936 | 1,182,009 | 667,927 | |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 379,160 | 402,160 | (23,000) | |
| சேவைக் கட்டணம் | 105,000 | 244,265 | (139,265) | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 800,610 | 711,317 | 89,293 | |
| பிற வருவாய் | 332,312 | 121,467 | 210,845 | |
| வருவாய்க்கான உதவி | 8,412,882 | 6,774,441 | 1,638,441 | 2,807,331 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 9,314.132 | 7,645,986 | (1,668,146) | |
| பயணச் செலவினம் | 240,300 | 168,955 | (71,345) | |
| வழங்கலும் சேவைகளும் | 339,488 | 224,453 | (115,035) | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 2,070,745 | 1,345,325 | (725,420) | |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 329,144 | 329,844 | 700 | |
| உதவிப் பணம், உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 485,158 | 240,553 | (217,605) | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 946,507 | 148,444 | (798,063) | 3,594,914 |
| சாதகமற்ற வேறுபாடு | | | | (787,583) |

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வர்த்தக அனுமதிப் பத்திரமும் ஏனைய வருவாயும்

வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம், நீர்க்கட்டணம், கடை வாடகை என்பவற்றின் 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான நிலுவைகளது அறவீடு 3 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. ஆண்டிற்கான கடை வாடகையாகக் கணிப்பிடப்பட்டிருந்தவற்றினது முன்னேற்றமும் 27 சதவீதத்திற்குக் குறைவாகவே இருந்தது.

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 1,198,201 |
| முத்திரைக் கட்டணம் | 429,235 |
| | 1,627,436 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) கந்தகெட்டிய சந்தியில் உள்ள 5 கடைகளது குத்தகையாளர்களுடனான உடன்படிக்கை 2007 ஜுலை 15 ஆந் திகதி காலாவதியாகி இருந்தது. ஆனால், இந்த உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்படவில்லை. முன்னையவருக்கே நெடுங்கால அடிப்படையில் இக்கடைகளைக் குத்தகைக்கு வழங்குமாறு 2012 ஆம் ஆண்டில் முதலமைச்சர் அங்கீகரித்திருந்தார். ஆனால் 2014 ஜுன் மாதத்திலும் அவ்வாறாக அக்கடைகள் குத்தகைக்கு வழங்கப்படாதிருந்தன.

(ஆ) சபைக்குரிய கந்தகெட்டிய சந்தியில் உள்ள 5 கடைகளும் சந்தை நடைபெறும் இடத்தில் உள்ள 3 கடைகளும் உள்ளூராட்சி ஆணையாளரது 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்படாதிருந்தன.

### 3.2 பயன்படுத்தப்படாதிருந்த சொத்துக்கள்

(அ) பாவனைக்குத் தகுதியான நிலையில் இருந்த 252-6371 இலக்க கெப் வண்டி பயன்படுத்தப்படாதும் UPGY - 0873 இலக்க கை டிறக்டர் சபை வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டுமிருந்தன. டிறெய்லர் பழுதடைந்தவாறிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டில் இடர் முகாமைத்துவ நிலையத்தால் சபைக்கு வழங்கப்பட்ட மின் உற்பத்தி இயற்திரம் 2011 முதல் செயலாற்றிருந்தது. அதனைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது சபை வளாகத்தில் இருந்தது.

(இ) உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட டொசீபா நிழற்பிரதி இயந்திரம் செயலற்றதால் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 3.3 கழிவுகளை அகற்றுதல்

சபை திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபடாமையால் சேகரிக்கப்படும் கழிவுகள் முறையற்றவாறு ரஜ மாவத்தையில் அமைந்துள்ள மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான புத்தங்கோட்டே காணி ஒன்றில் அகற்றப்பட்டவாறிருந்தது.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

2013 ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| தீர்வையும் வரியும் | 753,740 | 929,635 | 175,895 | 23.3 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 515,000 | 379,160 | 135,840 | 26.3 |
| சேவைக் கட்டணம் | 725.000 | 105.000 | 620,000 | 85.5 |
| ஏனைய வருவாய் | 169,700 | 332,312 | 162,612 | 95.8 |
| வருவாய்க்கான உதவி | 7,461,172 | 8,412,882 | 951,710 | 12.7 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| பயணச் செலவினம் | 196,000 | 240,300 | 44,300 | 22.6 |
| வழங்கலும் உபகரணங்களும் | 425,000 | 339,488 | 85,512 | 20.1 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,400,000 | 2,070,745 | 670,745 | 47.9 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 390,000 | 329,144 | 60,856 | 15.6 |
| உதவிப்பணம், உதவுதொகை, நிவாரணத் தொகை | 810,000 | 458,158 | 351,842 | 43.4 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 196,716 | 946,507 | 749,791 | 381.1 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்து முகாமைத்துவம்